# விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி 'மெட்ரோ' நிலையங்களில் ஏற்பாடு

**சென்னை, நவ. 6–**
மெட்ரோ ரயில் நிலையங்களில், கொரோனா தொற்று தடுப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இப்பயணியருக்கு, நாளை முதல், கொரோனா விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விமான நிலைய மெட்ரோ நிலையத்தில், நாளையும், திருமங்கலத்தில், வரும், 8ம் தேதி, மீனம்பாக்கத்தில், 21ம் தேதி, உயர் நீதிமன்ற மெட்ரோ நிலையத்தில், 22ம் தேதியும், கொரோனா தடுப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டிச., 6ல் ஆலந்துார்; 14ல், கோயம்பேடு; 21ல், எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் மெட்ரோ; 25ல் வண்ணாரப்பேட்டை; 27ல், திருமங்கலம் மெட்ரோ நிலையங்களில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

வரும், 2021, ஜன., 1ல், விமான நிலைய மெட்ரோ நிலையம், ஜன., 3ல் திருமங்கலம் மெட்ரோ நிலையங்களிலும், விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

மெட்ரோ நிறுவனம், நிமிர்வு கலையகத்துடன் இணைந்து, காலை, 10:00 மணியில் இருந்து, 12:00 மணி வரையும், மாலை, 6:30 மணியில் இருந்து, இரவு, 8:30 மணி வரையும், நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.